விலை ரூபா 1—25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 23 ரபி - ஆகி 15 இதழ் 324
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7-1-85

இரண்டொரு தினங்களில்

## ஜனாதிபதியின் உயர்மட்ட தூதுவர் இந்தியா செல்வார்!

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் உயர்மட்ட விசேட தூதுவர் ஒருவர் அடுத்த சில தினங்களில் புதுடில்லிக்குச் செல்லக்கூடும் என நம்பகமாக அறியப்படுகின்றது

இலங்கை இனப் பிரச்னை குறித்து இந்திய பிரதமர்திரு. ரஜீவ் காந்தி அதிக அக்கறை காட்டிவருவதால் இலங்கை அரசின் நிலைப்பாட்டினை இந்தியத் தலைவருக்கு எடுத்துக் கூறுவதற்காக இத் தூதுவர் அங்கு செல்லவிருப்பதாக நம்பப்படுகிறது.

திரு. ஜெயவர்த்தனவின் சகோதரர் எச். டபிள்யு ஜயவர்த்தன அல்லது தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திருலலித் அத்துலத் முதலி ஜனாதிபதியின் தூதுவராகச் செல்லக் கூடும் என்று கருதப்படுகின்றது.

### தூதுவருக்கு அழைப்பு

இதேசமயம் இலங்கையின் இனப்பிரச்னை தொடர்பாக உயர்மட்ட ஆலோசனையை நடத்தும் பொருட்டு புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரத்ன நேற்று கொழும்புக்குப் புறப்பட்டு வந்தார்.

இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண தமது அரசின் விருப்பத்தை தெரிவித்து ஜனாதிபதி திரு. ஜே.

(4-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

மன்னாரில் மற்றுமொரு கோரச்சம்பவம்:

# மதகுரு சுட்டுக் கொலை!

## ஆஸ்பத்திரியில்9சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

**மன்னார் பகுதியிலுள்ள வங்காலையில் நேற்று முன்தினமிரவு நடந்த துப்பாக்கிச் சூட்டில் மதகுரு ஒருவர் உட்பட 10 பேருக்குமேல் பலியானார்கள் என்று அஞ்சப்படுகிறது.**

**வங்காலை புனித ஆன்ஸ் ஆலயத்தை இராணுவத்தினர் சுற்றிவளைத்து தேடுசல் நடத்தியபோது இச்சம்பவம் நடந்ததாக மன்னாரில் இருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன.**

ஆலயத்தில், 2 சிறுவர்களின் சடலம்கண்டெடுக்கப்பட்டது. மன்னார் ஆஸ்பத்திரி சவச்சாலையில் 9 சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன.

### குருவானவர் மரணம்

இச்சம்பவத்தில் இளவாலையைச் சேர்ந்த குருவானவர் எம் பஸ்தியானும் (35 வயது) பலியானார் என்று மன்னார் ஆயர் இல்லத்தை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். ஆனல் குருவானவரின் சடலம் கிடைக்கவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக மன்னார் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் நேற்றுக் காலை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் தொடர்பு கொண்டு சகல விபரங்களையும் தெரிவித்தார்.

மன்னாரிலிருந்து ஆறுமைல்களுக்கு அப்பால் உள்ள வங்காலை புனித ஆன்ஸ் ஆலயத்திற்கு அருகில் உள்ள குருமனையில் வண. பிதா எம். பஸ்தியானும், இரு சிறுவர்களும், ஒருபணியாளரும் வசித்து வந்தனர்.

இச் சம்பவத்தின் போது அங்கிருந்த இரு சிறுவர்களும் துப்பாக்கிச்சூட்டுக்கு பலியானார்கள் என்றும் பணியாள் காயத்துடன் தப்பி விட்டாரென்றும்இரத்தக்காயத்துடன் வண பிதா பஸ்தியான், இனந் தெரியாத இருவரால் தூக்கிச் செல்லப்பட்டதாக மன்னார் ஆயர் இல்லத்தை சேர்ந்த மதகுரு ஒருவர் தெரிவித்தார்.

### இரவு முழுவதும் சூட்டுச்சத்தம்

இராணுவத்தினர் நள்ளிரவு தேவாலயத்தை சுற்றிவளைத்ததாகவும் தொடர்ச்சியாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள்

[4-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

## ஆஸ்பத்திரியில் 9 சடலம்: இருவர் அடையாளம் தெரியாது

(யாழ்ப்பாணம்)

மன்னார் — வங்காலையில் நேற்றுமுன்தினம் நடந்த துப்பாக்கிச் சூட்டின்போது மரணமான 9 பேரின்சடலங்கள் மன்னார் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன. அவைகளில் 7 பேரின் சடலங்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டுள்ளன. இருவர் நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை

ஏழு பேரின் விபரம் வருமாறு:

1 தங்கச்சியம்மா 72 வயது, 2 சூசையப்பர் சேமன் பீரிஸ் (19), 3. குயின்ரஸ்பீரிஸ்(18), 4 நாதன் குரூஸ் (21), 5, பாலசுப்பிரமணியம் அழகரட்ணம் (15), 6. லெனில் பெல்லாரேு (24), 7. ரூபஸ் குருஸ் (22).

### கன்னியர் மடத்தில்

நேற்று அதிகாலை ஆறுமணியளவில் வங்காலை கன்னியர்மடத்துக்குச் சென்ற ஆயுதப்படையினர், அங்கிருந்த சகோதரிகளை வெளியில் செல்லும்படி உத்தரவிட்டு விட்டு மடத்துக்குள் புகுந்து எல்லாப் பொருட்களையும் துருவித்துருவி சோதனை நடத்தியதாகத் தெரியவருகின்றது. அங்கிருந்த சில பொருட்களையும் எடுத்துச் சென்றனர்.

அரசஅறிக்கை இப்படிக் கூறுகிறது

## ராணுவத்தின்மீது தாக்குதல் நடந்ததாம்

### திருப்பிச்சுட்டதில் 8 பேர் பலியாம்

(கொழும்பு)

மன்னார் பகுதியிலுள்ள வங்காலையைச் சேர்ந்த தேவாலயத்திற்கு அருகே நேற்று முன்தினமிரவு ரணுவத்தினருக்கு எதிரான தாக்குதல் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

''ராணுவத்தினர் அந்த வழியாக ரோந்து சென்ற சமயம் அவர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது

''ராணுவத்தினர் அதிகாலை வரைஒளித்திருந்துவிட்டு மீண்டும்வெளியே சென்றபோது மேலும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் திருப்பிச் சுட்டனர். இந்த சண்டை

[4-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## அமிர், சிவா, சம்பந்தன் நாளை டில்லி புறப்பாடு!

(சென்னை)

தமிழர் விடுதலைக் கூட்டணி குழுவினர் நாளை செவ்வாய்க் கிழமை காலை திரு ஜி.பார்த்தசாரதியை புதுடில்லியில் சந்திப்பார்கள்.

சென்னையில் தற்போது தங்கியிருக்கும் திரு. ஏ. அமிர்தலிங்கமும், இரா சம்பந்தனும் இன்று மாலை புதுடில்லி புறப்படுவார்கள்.

தற்போது இலங்கையில்தங்கியிருக்கும் திரு. எம்.சிவசிதம்பரம் இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளஇன்றுசென்னை வந்து இக் குழுவினருடன் டில்லி செல்வார்.

திரு. பார்த்தசாரதியின் அழைப்பின் பேரிலேயே நாளை கூட்டணிக் குழுவினர் புதுடில்லி செல்கிருர்கள். (க)

சைக்கிள் 'பர்மிட்';

## விண்ணப்பப் பத்திரம் இன்றுமுதல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் பர்மிட்டுக்கான விண்ணப்பப் பத்திரங்கள், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் இன்று முதல் வழங்கப்படும் என்று யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

கடந்த இருவாரங்களாக தனியார் மோட்டார் வாகனங்களின் பர்மிட்டுக்கான விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

சைக்கிளின் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரங்களை உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் பெற்று அவற்றை பூர்த்திசெய்து கொடுத்து பர்மிட்டை பெற்றுக் கொள்ளலாம்.

அரசாங்க, கூட்டுஸ்தாபன ஊழியர்களுக்கும், அத்தியாவசிய தேவையுள்ளவர்களுக்கும் முதலிடம் அளிக்கப்படும் என்றுதெரிகிறது கணிசமான அளவு பர்மிட்டுகள் சைக்கிள் பாவனையாளர்கட்கு வழங்கும் வரை இப்போதுளள நடைமுறையில் மாற்றமிருக்காது என்றும் நம்பகரமான வட்டாரத்திலிருந்து தெரியவருகின்றது.

அவசரகால சட்டத்தின்கீழ்

## நால்வரின் மரண விசாரணை நடந்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் துப்பாக்கி சூட்டுக்கு பலியான நால்வரின் மரண விசாரணை நேற்று யாழ். ஆஸ்பத்திரியில், நடைபெற்றது. யாழ். பதில் நீதவான் க கேசவன் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த கணேஸ் சோமசேகரன், முகமாலையை சேர்ந்த க. சுந்தரம், கொடிகாமத்தைச் சேர்ந்த ஆ. சந்திரசேகரம், ஆகியோரின் மரண விசாரணை நடைபெற்றது.

யாழ். நகரில் பலியான ராசசுந்தரம் ரவிசேகரன்மரண விசாரணையும் நடைபெற்றது.

நான்கு விசாரணைகளும் அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் நடைபெற்றது. (க)

## யாழ். ஆயரும் குருமாரும் பலத்த கண்டனம்

### சடலத்தைதருமாறு ஜனதிபதிக்குதந்தி

(யாழ்ப்பாணம்)

வங்காலையில் வண. பஸ்தியான் பாதுகாப்புப் படையினரால் கொலை செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்தும் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்வதற்கு அவரது உடலை தங்களிடம் ஒப்படைப்பதற்கு ஆவன செய்யும்படியும் கோரி யாழ். ஆயர் அதிவந். தியோகுப்பிள்ளையும் ஏனைய குருக்கள்மாரும் ஜனதிபதிக்கு அவசரத் தந்தி செய்தியை நேற்று அனுப்பிவைத்தனர்.

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த வண. பஸ்தியான் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டது குறித்து ஆழ்ந்த கவலையடைவதுடன் இச் செயலை மிக வன்மையாகக் கண்டிக்கிறேம் காலமானவர் யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவராகையால் கிறிஸ்தவ முறைப்படி நல்லடக்கம் செய்வதற்காக அவரது உடலை எம்மிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குப்படியும் கேட்டுக் கொள்கின்றேம் என அத்தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். கல்வித்திணைக்களத்துக்கு

## இடமாற்ற பட்டியல் வந்து சேரவில்லை!

((கல்வியங்காடு)

ஜனவரி முதல் யாழ் மாவட்டங்களுக்கு பாதிககப்பட்ட தென்பகுதிகளில் உள்ள பாடசாலை ஆசிரியர் பலருக்கு இடமாற்றம்வரும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இதுவரை இத்தகைய இடமாற்றப்பட்டியல் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேரவில்லை.

ஆயினும் ஆசிரியர்கள் பலருக்கு 'ஜனவரிமுதல் இடமாற்றம் கிடைத்துள்ளது, எனக்

[4-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு அணிஞ்சிலடி விநாயகர் ஆலயத்துக் கருகில் 6 ½ பரப்பு வீடு கட்ட ஏற்ற காணி உடன் விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். வை. சதாசிவம் 'வாமல் வீடு' கட்டுடை மானிப்பாய். 1197

H.-F. கைபை மியூசிக் சென்ரர் V.H.F T.V ரிவி. வீடியோடெக் 2 ரைப் ரைற்றர் மைக்றே வேவ் அவண் கிற்ராச்சி 3-ஸ்ரார் குளிர் சாதனப்பெட்டி, கென்வூட் செவ் (chef) ரொசீபா காஸ்குக்கர், 3 in one, றைஸ்குக்கர் மின் விசிறி மற்றும் மின்சார உபகரணங்கள். சண்முகம் புடவை மாளிகை ஆடியபாதம் வீதி நல்லூர்ச் சந்தை கல்வியங்காடு. 1199

மல்லாகம், பங்களா ஒழுங்கை, வீரபத்திர வைரவர் கோயிலுக்கு அன்மையில் 4½ பரப்புக் காணி கிணறு, மலசல கூடம், வீட்டிற்கான அத்திவாரத்துடன் விற்பனைக் குண்டு, தொடர்பு: A. P. நடராஜன், சட்டத்தரணி, மல்லாகம். 1259

## தேவை

41 வயது ஆணிற்கு கர்நாடக இசையில் டியூசன் தேவை. விண்ணப்பிக்க விளம்பர இல: 1253 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 12 3

## தவறிவிட்டது

கடந்த 31-12-84 அன்று சுன்னாகம் கந்தரோடை வீதியில் சில புகைப்படங்கள் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். E. இராசையா, தமிழ் பாடசாலை அருகில், கந்தரோடை, சுன்னாகம். 1239

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ) கிறே நைலெக்ஸ் விற்பனை

**பாவு 140 ஊடை 72''**
**அகலம் 46''**

மேற்குறிப்பிட்ட அளவினை உடைய கிறே நைலெக்ஸ் கேள்விமூலம் விற்பனைக்குண்டு. விரும்புவோர் மீளளிக்கக் கூடிய பிணைப்பணம் ரூபா 1000/- செலுத்தி சங்கத்தால் வழங்கும் கேள்வி விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவும் விண்ணப்பப் படிவம் ரூபா 10/- சங்கத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளவும்

விண்ணப் முடிவுத் திகதி 20-1-85 விண்ணப்பங்கள் யாவும், ''தலைவர் சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை'' என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்,
சங்கானை.

5-1-85. 1257

## கேள்விப் பத்திர அறிவித்தல்

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையிலுள்ள மல சல கூடங்கள், கான்கள், சாப்பாட்டு அறைகள், அதன் சுற்றுடல் ஆகியவற்றைத் துப்புரவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திர விண்ணப்பங்களை 1985-01-15-ந் திகதி பிற்பகல் 4-00 மணி வரை தொழிற்சாலை விநியோக உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்வதோடு இதர விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோக உத்தியோகத்தர்,
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
1985-01-03. காங்கேசன்துறை. (1227)

## 1-வது பிறந்த நாள் வாழ்த்து

ஜெயக்குமார் செல்வறஞ்ஜினி (செல்வி)



இல.7 சென் செபஸ்ரியன் வீதியில் வசிக்கும் ஜெயக்குமார் பேரின்பநாயகி தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வறஞ்ஜினி (செல்வி) தனது 1-வது பிறந்ததினத்தை இன்று 7-1-85ல் தனது இல்லத்தில் குதூகலமாக கொண்டாடுகிறார். இவரை பேரும் புகழும் பெருவாழ்வும் பெற்று சகல கலைகளையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென டாடா, மம்மி, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, அன்புத் தொட்டப்பா (ஜேர்மனி). ஆசைத்தொட்டம்மா, பேபி அன்ரா மற்றும் உற்றார், உறவினர்கள் அன்புடன் வாழ்த்துகிறார்கள். 1256

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி 354. காலஞ்சென்ற கறுப்பன் செட்டியார் மூக்கையா என்பவரின் மரணசாதனமில்லாத சொத்துக்களின் விடயத்தில்

கறுப்பன் செட்டியார் மூக்கையா கைம்பெண் சரோஜா, 354, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
மனுதார்

வழ. இல. தத்துவம்/3812

மேற்குறித்த இலக்கங் கொண்ட தத்துவ வழக்கு மேற்காணும் இறந்தவரின் மரணசாதனமெழுதாத சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1984-ம் ஆண்டு 9-ம் மாதம் 7-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 17-ந் திகதியாகிய இன்று திகதியிடப்பட்டது.

நீதிமன்றக்கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

W. S. செந்தில்நாதன்,
மனுதாரின் சட்டத்தரணி.

காரணங்காட்டுந் திகதி 11-1-1985க்கு நீடிக்கப்பட்டுள்ளது (1221)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றத்தில்

திருநெல்வேலி வடக்கு சுந்தரம் காசிநாதரின் மரணசாசனமில்லா மரணச்சொத்து விடயமாக

மரணமெய்தியவர்

வழ இல:-
மரணசொத்து
நிர்வாகம் 3841

காசிநாதர் கைம்பெண் விஜயலெட்சுமி,
மடம் லேன்,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.

எதிராக — மனுதார்

1. காசிநாதர் மகன் சிவசுந்தரம்
2. காசிநாதர் மகள் தேவன் இருவரும் மடம்லேன், திருநெல்வேலி வடக்கு திருநெல்வேலி.

— எதிர்மனுதார்கள்

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காகவேண்டி மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறை உள்ள ஆள் எவரும் 1985-ம் ஆண்டு தை மாதம் 25-ம் நாளன்று முற்பகல் 9 30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் -ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்..

என்னால் வரையப்பட்டது.
லிங்கா துரைராஜா,
மனுதாரின் சட்டத்தரணி
1225

# முல்லைத்தீவு அபிவிருத்திச் சபை கேள்வி அறிவித்தல் - 1985

மாவட்ட அபிவிருத்திச் சபை, முல்லைத்தீவு. 02-01-1985

முல்லைத்தீவு அபிவிருத்திச் சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை 1985ம் ஆண்டு தை மாதம் 01ம் திகதி தொடக்கம் 1985ம் ஆண்டு மார்கழி 31ம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் மீளவும், 22-01-1985ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை முல்லைத்தீவு அபிவிருத்திச் சபையின் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும். இவற்றிற்குரிய கேள்விப் பத்திரங்களை, அவ்வவ் உப அலுவலகங்களிலிருந்து உரிய கேள்விப் பத்திர வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தியதன் பின்பு இணைப்பிரதிகளில் 11-01-1985ம் திகதி காலை 9-00 மணியிலிருந்து 18-01-1985 ஆம் திகதி காலை 12-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இணைப்பிரதிகளாகப் பெற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்களின் மூலப்பிரதியை எனக்கும், இணைப்பிரதியை சம்பந்தப்பட்ட உபஅலுவலகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும். கேள்விகள் 22-01-1985ஆம் திகதி பி. ப. 2-00 மணிக்கு திறக்கப்படும். விரும்புகின்ற கேள்விக்காரர்கள் அவ்வமயம் சமூகம் கொடுக்கலாம்.

கேள்விகள் பற்றிய மேலதிக விபரங்கள் சம்பந்தப்பட்ட உபஅலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அளம்பில், செம்மலை, கொக்கிளாய் ஆகிய இடங்களில் உள்ளவர்கள் கேள்விப் பத்திரங்களை மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் (கச்சேரி) பெற்றுக்கொள்ளலாம்.

கா. க. ஞானச்சந்திரன்,
கேள்விச் சபைத் தலைவரும், மாவட்டச் செயலாளரும்,
முல்லைத்தீவு அபிவிருத்திச் சபை,
முல்லைத்தீவு.

முல்லைத்தீவு அபிவிருத்திச்சபை,
அபிவிருத்திச் செயலகம்,
முல்லைத்தீவு.

## சந்தைகள், கடைகள், மாட்டிறைச்சிக் கடைகள், ஆட்டிறைச்சிக் கடைகள் விபரங்கள்

| உப அலுவலகம் | விடயம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப்படிவக் கட்டணம் | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| 1. முல்லைத்தீவு பட்டின உப அலுவலகம். | முல்லைத்தீவு பொதுச்சந்தை | 2,53,000/- | 50-00 | 5000-00 |
| | ஆட்டிறைச்சிக் கடை | 15,400/- | 50-00 | 2000-00 |
| 2. முள்ளியவளை உப அலுவலகம் | தண்ணீரூற்று சந்தை | 18,200/- | 50-00 | 2000-00 |
| | முள்ளியவளைச் சந்தை | 8 100/- | 50-00 | 1000-00 |
| | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 26,200/- | 50-00 | 3000-00 |
| | தண்ணீரூற்று ஆட்டிறைச்சிக்கடை | 3,050/- | 50-00 | 1000-00 |
| 3. புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | புதுக்குடியிருப்பு சந்தை | 36,000/- | 50-00 | 3000-00 |
| | உடையார்கட்டு சந்தை | 350/- | 50-00 | 50-00 |
| 4. ஒட்டிசுட்டான் உப அலுவலகம். | ஒட்டிசுட்டான் சந்தை | 1,600/- | 50-00 | 250-00 |
| | ஒட்டிசுட்டான் மாட்டிறைச்சிக்கடை | 9,500/- | 50-00 | 1000-00 |
| 5. ஒலுமடு உப அலுவலகம். | மாங்குளம் சந்தை | 16,550/- | 50-00 | 2000-00 |
| 6 முள்ளிவாய்க்கால் உப அலுவலகம். | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 2,600/- | 50-00 | 500-00 |
| | முள்ளிவாய்க்கால் சந்தைக் கடை | 50/- மாதத்திற்கு | 50-00 | 50-00 |
| 7. செம்மலை உப அலுவலகம். | குமுளமுனைச் சந்தை | 1,100/- | 50-00 | 250-00 |
| | குமுளமுனைச் சந்தைக் கடை இல 01 | 900/- | 50-00 | 200-00 |
| | குமுளமுனைச் சந்தைக் கடை இல 02 | 900/- | 50-00 | 200-00 |
| 8. கொக்கிளாய் உபஅலு. | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 2,800/- | 50-00 | 500-00 |
| 9. பாண்டியன்குளம்உபஅலு. | பாண்டியன்குளம் சந்தைக்கடை இல 01 | 100/- மாதத்திற்கு | 50-00 | 50-00 |
| | பாண்டியன்குளம் சந்தைக்கடை இல 02 | 100/- மாதத்திற்கு | 50-00 | 50-00 |
| 10. துணுக்காய் உபஅலு. | யோகபுரம் சந்தை | 1,100/- | 50-00 | 250 00 |
| 11. செம்மலை உப அலு. | நாயாறு மாட்டிறைச்சிக்கடை | 1,724/- | 50-00 | 250-00 |
| | அளம்பில் மாட்டிறைச்சிக்கடை | 1,200/- | 50-00 | 250-00 |

(1252)

**ராணி** (யாழ்ப்பாணம்)

10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

**வின்ஸர்** (யாழ்)

10-30, 2-15
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா

**சிவப்பு சூரியன்**
(ஈஸ்ட்மன் கலர்(

**லிடோ** சினிமா

தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film -
Action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30,
சிவாஜி, லக்ஷ்மி
**தியாகம்**
(கலர்)

**றீகல் மினி**
10-15, 1-15 மட்டும்
ரஜனிகாந்த்—ராதிகா
நடிக்கும்
ஏவி. எம். மின்
**நல்லவனுக்கு நல்லவன்**

இன்று முதல்
**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
ஜெய்சங்கர்-நிர்மலா
சுந்தரராஜன்
**நீதிதேவன்**
(புத்தம் புதிய பிரதி)

**ராஜா**
10 30 2.00
ராஜீவ், சந்திரசேசர்
ரூபா
நடித்த
**ஒரு தலை ராகம்**
[ஈஸ்மன்கலர்]

**ஸ்ரீதர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதே
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)


# எம். ஜி. ஆர். உடல் நிலையை அமைச்சர் 'ராசு' அறிந்தார்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியின் வெற்றி குறித்து பிரதேச அபிவிருத்தித் துறை அமைச்சர் திரு எஸ். இராஜதுரை வாழ்த்துசெய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

"தங்களின் வெற்றி இந்தியாவின் ஒற்றுமைக்கும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்" என்று அவர் தமதுவாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 'புறூக்ளின்' மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரனது உடல்நிலை குறித்து மருத்துவ மனையில் இருக்கும் அவரது டாக்டர் சுப்பிரமணியம், செயலாளர் பரமசிவம் ஆகியோருடன் தொடர்புகொண்டு விசாரித்து அறிந்துகொண்டார்.

அண்ணா தி. மு க. தேர்தலில் பெற்ற வெற்றி குறித்தும் அமைச்சர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

## சிறப்பான விழா

(யாழ்ப்பாணம்)

ஈழத்துச்சிதம்பரம் எனப்படும் காரைநகர் சிவன்கோவில் தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை நடபெற்றது. தேவஸ்தானமும் அன்னதானமடமும் எதிர் பார்த்ததிலும் பார்க்க அதிகமான மக்கள் வந்திருந்தார்கள் நவாலி ஸ்ரீ சுவாமிவிசுவநாதக்குருக்கள் விழாக்கிரியைகளைச் சிறப்புச் செய்தார். [ப]


## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வட்டுக்கோட்டை, வட்டுக்கோட்டை மேற்கில் வசித்த காலஞ்சென்ற சின்னப்பு நடராசாவின் மரண சாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு நிருவாகத் தத்துவப்பத்திரம் விடயத்தில்.

நடராசா கைம்பெண் நேசமணி, வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை.
— மனுதார்

வழ. இல: தத்துவம்/3842
எதிராக

1. நடராசா பொன்னம்பலம், வட்டுக்கோட்டை மேற்கு வட்டுக்கோட்டை தற்போது 12 ஹாவாட் கோட் கொனேக்ஸ்போன் றூேட்டு, லண்டன் என். டபிள்யு 6, இங்கிலாந்து.
2. நடராசா விவேகானந்தன் வட்டுக்கோட்டைமேற்கு, வட்டுக்கோட்டை தற்போது பிளேற் 5, '3 கிளேறிக்காட் காடின்ஸ், லண்டன் டபிள்யு 2, இங்கிலாந்து.
3. நடராசா விபுலானந்தன் வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை
4. நடனேஸ்வரி மகேஸ்வரன், 65/8, பாக் றூேட் கொழும்பு-2
5. திருமதி இராஜேஸ்வரி மகேந்திரராசா வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை, தற்போது 1 அவன் றூேட்டு, லண்டன் எஸ். இ. 4, இங்கிலாந்து.

பிரதிவாதிகள்

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனம் இல்லாத மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு மார்கழி மாதம் 14-ந் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1984ம் ஆண்டு மார்கழி மாதம் 3ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைந்தது:
மனுதாரின் சட்டத்தரணி
14-12-84

காலம் 8-2-85 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்,
1206 பதிவாளர்

## நன்றி நவிலல்

இளைப்பாறிய சிறைச்சாலை மேற்பார்வையாளரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே. எம். மாணிக்கம் அவர்களின் இறுதிக் கிரியைகளின்போது (3-1-85 வியாழக்கிழமை) கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது துன்பத்தில் பங்குபற்றியதோடு பலவகையான உதவிகள் புரிந்தவர்களுமான உற்றூர், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அன்னாரின் குடும்பத்தினராகிய நாங்கள் அனைவரும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

6/1 மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.


1260

## 31-ம் நாள் நினைவஞ்சலி

பருத்தித்துறை
அமரர் ச. வேங்கன் (...)

தோற்றம்
18-9-1932

மறைவு
9-12-1984



எமது குடும்பத் தெய்வத்தின் அந்தியேட்டி 7-01-1985 எமது இல்லத்தில் நடைபெறும் கிரியையில் கலந்து கொள்ளுமாறு உற்றூர், உறவினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்
பருத்தித்துறை.

1254

## Euro Lanka Travels Ltd.

யாழ். நகர மக்களின் வசதியை முன்னிட்டு கொழும்பில் தலைமை அலுவலகத்தைக் கொண்டிருக்கும் எமது ஸ்தாபனம் இப்பொழுது யாழ். நகரிலும் எமது கிளையை ஆரம்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்

BERLIN [பேர்லின்] மற்றும் உலகின் எல்லாப் பாகங்களிற்கும் மற்றெல்லா ஸ்தாபனங்களையும் விட மிகக்குறைந்த விலையில் விமான டிக்கட்டுகள்.

AIR LANKA சேவையில் 14,000 மட்டுமே (வியன்னா வழியாக)

AEROFLOT சேவையில் 13,195 மட்டுமே (மொஸ்கோ வழியாக)

எமது சேவையின் விபரங்கள்:-

(1) உங்கள் பயணம் முடியும்வரைக்கும் எமது பிரதிநிதிகளின் 24மணிநேர ஒத்துழைப்பு.
(2) பிரயாணக் காசோலைகள் (TRAVELLER'S CHEQUE) எடுத்துக் கொடுப்பதற்கான இலவச சேவை.

மேலும் விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

**EURO LANKA TRAVELS LTD.**
40, 3rd Cross Street, Jaffna.

தலைமைஅலுவலகம்:
EURO LANKA TRAVELS LTD.
6A, Daisy Villa Avenue Colombo-4
தொலைபேசி; 585900 589992

கிளை:
EURO LANKA TRAVELS LTD.
8th Floor Paul VI Centre,
Front Street Colombo-11.
தொலைபேசி: 549495

(1205)

## Grade 9 and O/L வகுப்புகள்

ஆரம்பம்: 7-1-1985 மாலை 3 மணி

விஞ்ஞானம் — யாழ் பிரபல ஆசிரியர்
இரா. செல்வவடிவேல்.
கணிதம் — வாமதேவன்.
தமிழ், சமூகக் கல்வி, ஆங்கிலம், சுகாதாரம், வர்த்தகம், ஆகிய பாடங்களும் நடைபெறும்.

**ராதாகிருஷ்ணாஸ் பொலிடெக்னிக்,**
392, நாவலர் வீதி, கைலாய பிள்ளையார் கோவிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம். [1235]

## SAFETY TRAVELS

## புகையிரத தொடர்புச்சேவை

இன்றுமுதல் சேவ்ரி ரவல்ஸ் ஸ்தாபனத்தாரின் புகையிரதத் தொடர்புச் சேவை ஆரம்பமாகிறது.

**புறப்படும் இடம்:**

சேவ்ரி ரவல்'ஸ் டிப்போ,
24, பண்ணைவீதி,
யாழ்ப்பாணம்.

**நேரம்:**

காலை 8-30

நிர்வாகி

(1262)


## வல்வெட்டித்துறை—நகரசபை

## முக்கிய அறிவித்தல்-1985

1984ம் ஆண்டு விதிக்கப்பட்ட விகிதமே இவ்வருடம், சோலை வரியாகவும் உரிமைக் கட்டணம், வண்டி வாகன வரி, மலகூட வரி ஆகியவையாகவும் விதிக்கப்பட்டுள்ளது. புற நடைகள் தவிர வீத வரி 42/79ம் இலக்கச் சட்டத்தின்படி 1985ம் ஆண்டு ஜனவரி மாசத்துள் செலுத்தி பத்து வீதக் கழிவைப் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

2. அமுலிலுள்ள அவசரகால விதிகளாலும் ஏனைய காரணங்களாலும் பூட்டப்பட்டுள்ள நிலையிலுள்ள மனைத்தலங்கள். கடைகள் பற்றிய அறிவித்தலை உரியநேரத்துள் அலுவலகத்தில் கிடைக்கச்செய்து உரிய நிவாரணத்தைப் பெறலாம்.

3. 1985ம் ஆண்டிலிருந்து ஓர் ஐந்தாண்டுத் திட்டம் வகுக்க தங்கள் வட்டாரத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகளைப் பகுதிக்கிராம அபிவிருத்திச்சங்க மூலமாகவோ சனசமூக நிலையங்களுக்கூடாகவோ சமர்ப்பித்தால்முன்னிலைப்படுத்தி நடைமுறைப்படுத்தலாம்.

4. வலயப் பிரகடனத்தால் வீட்டைவிட்டு இடம் பெயர வேண்டியிருப்பின் எமக்கு அறியத்தந்தால் மின்மானியை அகற்றி உதவலாம். அத்துடன் வரி நிவாரணமும் கிடைக்கும்.

தயவுசெய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும்.

க. சுப்பிரமணியம்.
செய்லாளர்,
நகரசபை, வல்வெட்டித்துறை.

நகரசபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை, 1-01-1985.
வே. சா. 1240

## மணிவாக்கு

புல்லைக்காட்டிலும் தாழ்மை கொண்டிரு. மரத்தைப் போல் பொறுமையாக இரு, உன்னை ஒருபொருட்டாக எண்ணிக் கொள்ளாதே. பிறரை மதித்திரு; ஹரி எப்பொழுதும் புகழப்பட வேண்டியவன்.

— சைதன்யர்

# நமது நோக்கு

## சிவத்தமிழ்ச் செல்வி

தொண்டில்லாது உயிர்க்கு ஊதியமில்லை என்பது இந்நன்னுள் நினைவூட்டும் நெறி.

இன்று அறுபது வயது குறைந்த செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி காலம் எமக்குத் தந்த பரிசு. தனது தேவைக்காக காலம் ஒரு விவேகாநந்தரை, ஒரு நாவலரை, ஒரு பாரதியை அறிமுகப்படுத்துகிறது.

இந்த நூற்றுண்டில் நாம் வாழும் காலத்தில் எமது நாட்டில் சமயத்தை கோவிலில் இருந்து கொட்டிலிலும் குடிசைகளிலும் வாழும் மக்களிடம் கொண்டுவரும் தொண்டில் தலைமைவகித்து மக்களின் அபிமானத்தை சம்பாதித்த பெருமை சிவத்தமிழ்ச் செல்விக்கே உரியது. எனவே அவர் ஒரு இயக்சம்.

பக்திஇயக்கத்துக்கு தமிழ் நாட்டில் பெரும் பணிபுரிந்தவர் காரைக்காலம்மையார். அதன் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியவர் மங்கையர்க்கரசியார் 'நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீ வா' என்று கூவிஅழைத்த அப்பர் அடிகளுக்கு உறுதுணையாய் இருந்தவர் அவருடைய சகோதரி திலகவதியார்.

இந்த வரிசையில் தொடரும் இவ்வியக்கம் எங்கள் நாட்டிலும் ஒரு சிவத்தமிழ்ச் செல்வியை கண்டிருப்பது எங்கள் நற்பயன்.

அவருடைய தொண்டு தொடர், அவரைப் போல் சிவதொண்டைச் சமுதாய தொண்டாக மிளிரச் செய்யும் ஆற்றல் பெற்ற பலர் இன்று தேவை. ஆண்டவன் அவருக்கு எல்லா நலன்களும் வழங்க வேண்டுமென இறைஞ்சுகிறோம்.

## இராணுவத்தி ்ர் இன்னெரு சாதனை!

இன்று யாழ்ப்பாணத்தில் மறுகணம் என்ன நடக்கப் போகிறது என்பது எவருக்கும் தெரியாது

வழிப்போக்கன் சடுதியில் மறைவது உலகின் நிலையாமையை உணர்த்துகிறது. தத்துவ அறிவில்லாமலே அதனைப் புரிந்து கொள்ளலாம். இலங்கை இராணுவம் தான் இதனை நினைவூட்டுகிறது என்றுநாம் கூறவில்லை.

நாம்குறிப்பிடுவதுசென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற தனித்துவ சம்பவம் ஒ று. யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர் சிவஞானவேலைத் தெரியாதவர் மிகச் சிலரே. எலும்பு முறிவுக்கு, நெறிவுக்கு ஆளானவர்கள் மட்டுமல்ல அதற்கு ஆளாகவிருச்கும் ஏனையோரும் டாக்டரின திறமையை நன்கறிவர்.

பைசிகிளில்சென்ற டாக்டரை ராணுவம் தாக்கியது ஒருபெருஞ் செய்தியாக பரபரப்பை ஏற்படுத்தியது பத்திரிகை படித்தவர்களுக்குத் தெரியும்.

'சட்டத்துக்கு முன் எல்லோரும் சமம்' என்பதை அடிககடி ஜனாதிபதி அவர்கள் நினைவூட்டுவது உண்டு. எனவே தவறு செய்தவர் யாராயிருந்தாலும் தண்டனைக்குரியவர் டாக்டரைத் தாக்கிவிட்டால் அதில் என்ன பிரமாதம்?

ஆனல் விடயம் தொடர்ந்தது. மருத்துவ நிபுணர்கள், ஆஸ்பத்திரி ஊழியர் அனைவரும் கூடி இதற்கொருபாடம் படிப்பிக்க முயன்றனர் சும்மா விட முடியுமா?

செய்தியையறிந்த பிறிகேடியர் விடயத்தை விளங்கும் திறமையும் பெருந்தன்மையும் உடையவர். விரைந்து வந்து டாக்டர் சிவஞானவேலிடம் மன்னிப்புக் கோரினர்.

ராணுவத்தில் கடமை புரியும் எல்லோரும் ஒழுக்கம் கட்டுப்பாடுடையவரா? டாக்டர் என்றறிந்த போதும் அவர் தாக்கப்பட்டது உண்மை; ஆனல் இலங்கையில் முறிவு வைத்தியத்தில் மிகத் திறமைபெற்ற மிகச்சிலரில் சிவஞானவேல் ஒருவர் என்பதை ராணுவத்துக்குத் தெரியுமா? திறமை மட்டுமல்ல! தாக்கினவருக்கே முறிவு ஏற்பட்டால் தலத்திலிருந்து தமது சிகிச்சை நிலையத்துக்கு உடனே கொண்டுபோய் ஆவன செய்யும் அருளும் ஆற்றலும் உடையவரென்பதை ராணுவத்துக்கு எப்படித் தெரியும்?

இன்று இதனைத் தெரிய வைத்த சாதனையையே எமது தலையங்கம் குறிப்பிடுகிறது.

இன்னு செய்தாரை
ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்
குறள் விழல் அல்ல.

## வெள்ளிக்கிழமை யாழ். பிரஜைகள் குழு ஜனுதிபதியைச் சந்திக்கும்

(கொழும்பு)

யாழ். பிரஜைகள் குழுவினர் வரும் வெள்ளிக்கிழமை ஜனுதிபதி திரு ஜே ஆர். ஜயவர்த்தனுவை சந்திக்கின்றனர்.

ஏற்கனவே பல அமைச்சர்களையும் எதிர்க்கட்சிப் பிரமுகர்களையும் சந்தித்து வடபகுதி நிலைமைகள் பற்றி விவாதித்த யாழ். பிரஜைகள் குழுவினர் அடுத்த கட்டமாக ஜனுதிபதியைச் சந்திக்கவிருக்கின்றனர்.

'பூஸா' வில் காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் விடயம், வடபகுதியில் அமுலாக்கப்பட்டுள்ள புதிய கட்டுப்பாட்டுவிதிகள் ஆயுதபடையினரின் அத்து மீறிய நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் பற்றி பிரஜைகள் குழு ஜனுதிபதியுடன் விவாதிக்க விருப்பதாகத் தெரிகின்றது

### அகதிகளை பார்த்தனர்

யாழ் பிரஜைகள் குழுவின் செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியமும், பேராசிரியர் கா. சிவத்தம்பியும் நேற்று முல்லைத்தீவுக்குச் சென்று அரசாங்க அதிபர் திரு. ஞானசந்திரனுடன் அங்குள்ள அகதிகள்முகாம்களைப் பார்வையிட்டனர்.

இன்று அவர்கள் யாழ்ப்பாணம் வருவார்சள். 'பூஸா' முகாமிலுள்ள இளைஞர்களிடமிருந்து அவர்கள் கொண்டு வரும் கடிதங்களை உறவினர்கள் அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிகின்றது.

## இருபாலையில் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

இருபாலையில் நேற்று பிற்பகல் ஆயுதப்படையினர் சோதனை நடத்தினுர்கள். வாகனங்களில் வந்தவர்கள் விசாரணைக்குட் படுத்தப்பட்டனர். அடையாளஅட்டை இல்லாதவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டதாக கூறப்படுகிறது

அப்பகுதியில் இடையிடையே துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஹெலிகொப்டரும் அப்பகுதியில் வட்ட மிட்டுக்கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

[க]

## இந்துவில் மீண்டும் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மூன்றும் முறையாகவும் யாழ். இந்துக் கல்லூரியில் கொள்ளை நடைபெற்றுள்ளது

இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்த டெக், மற்றும் தொலைக்காட்சிப் பெட்டியையும் வேறு பொருட்களையுப் எடுத்துச் சென்றுள்ளனர்.

## முல்லைத்தீவு அகதிகள் கஷ்டம்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவில் அகதிகளாக தங்கியிருககும் தமிழர்கள் உணவு, உடைகள் இன்றி மிகவும் கஷ்டமடைவதாக கூறப்படுகிறது.

அவர்களுக்கு அரசாங்கத்தினுல் அளிக்கப்படும் நிவாரண உணவு உதவிகள் திருப்தியானதாக இல்லாதிருப்பதினுல் அவர்கள் பசி, பட்டினி என்பவற்றை அனுபவிப்பதாக கூறப்படுகிறது

## மீனவர்களுக்கு உணவு முத்திரை

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட பாதுகாப்பு வலயத்தினுல் பாதிக்கப்பட்ட 11,150 மீனவ குடும்பங்களுக்கு உணவு முத்திரைகளை வழங்குமாறு கடற்றெழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா அந்த, அந்தப்பிராந்திய கடற்றெழில் விஸ்தரிப்பு அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

## அரசஅறிக்கை...

(1ம் பக்க 2மகலத் தொடர்ச்சி)

யில் 8 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 5 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

''56 டைனமைட்டுகள், 8 கைக்குண்டுகள், ஒரு தொகை தோட்டாக்கள், வெற்று தோட்டாக்கள், தீவிரவாத இயக்கத்தின் துண்டுப்பிரசுரங்கள், நூல்கள், ஒலிப்பதிவு நாடாக்கள் முதலியன இந்த ஆலயத்திலிருந்து படையினரால் மீட்கப்பட்டன.

''இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படுகின்றன''.

## இரண்டொரு...

(1மபக்க 5ம்கலத் தொடர்ச்சி]

ஆர். ஜெயவர்த்தனுவினுல் இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்திக்கு அனுப்பபபட்ட கடிதத்தை திரு. பேர்னுட் திலகரத்னு கடந்த வாரம் திரு ராஜீவ் காந்தியைச் சந்தித்து கையளித்திருந்தார்.

திரு பேர்னுட்திலகரத்னுவின் கொழும்பு விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுவதாகப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

## எம்.ஜி.ஆருடன்சந்திப்பு

(நியுயோர்க்)

தமிழக நிதி அமைச்சர் திரு ஆர். நெடுஞ்செழியன், செயலாளர் திரு. கே சொக்கலிங்கம் ஆகியோர் நேற்று புறூக்ளின் மருத்துவமனையில் தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம் ஜி. ராமச்சந்திரனை சந்தித்து அளவளாவினர்.

## இடமாற்ற...

(1ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

குறிப்பிடும் கடிதங்கள் ஏற்கனவே கிடைத்துள்ளன.

இக் கடிதங்கள் கிடைக்கப் பெற்ற பெருந்தொகையான ஆசிரியர்கள் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு தினமும் வந்தபடியே உள்ளனர்.

## மன்னுரில்...

[1ம் பக்க 3ம் கலத்தொடர்ச்சி)

கேட்டதாகவும் பொதுமக்கள் தெரிவித்தாக அவர் மேலும் சொன்னுர்.

நேற்றுக்காலை மன்னுர்ஆயர் இல்ல மதகுருக்கள் வங்காலைக்குச் சென்று சம்பவம் நடந்த ஆலயத்தைப்பார்வையிட்டனர்.

வண பிதா பஸ்தியான் தங்கியிருந்த அறைக்குள் சுவரிலும் தரையிலும் இரத்தக் கறைகள் சாணப்பட்டதாக தெரிவித்தனர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து மன்னுர் மாவட்டம் முழுவதும் பதற்றம் நிலவுகிறது.

### கண்ணீர் அஞ்சலி

முன்னர் மானிப்பாயில் பணிபுரிந்தவரான வண. பஸ்தியானின் மறைவுக்கு யாழ். திருமறைக்கலாமன்றம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியுள்ளது. கலைகளில் அதிக ஈடுபாடு கொண்டவரான வண. பஸ்தியான் இந்த மன்றத்தின் தலைவராகவும் இருந்து வந்தார்.

### இன்று அஞ்சலி பூசை

வங்காலை குருமனையிலே அகாலமரணமான அருள் திரு. எம். எம். பஸ்தியான் அவகளுக்காக இறையருளை வேண்டி நாளை 8-ம் தேதி செவ்வாய் காலை 9 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயரின் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இப்பலியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ், மறைமாவட்ட குழுக்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

நேற்று யாழ். கொஞ்சேஞ்சி மாதா கோயிலிலும் ஏனைய றேமன் கத்தோலிக்க ஆலயங்களிலிலும் வண பஸ்தியானின் மறைவுக்கான துக்க மணி ஒலிக்கப்பட்டது.

முன்னுள் மன்னுர் எம். பி. திரு சூசைதாசன் மன்னுரில் இடம் பெற்ற சம்பவங்கள் குறித்து நேற்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சேப்பால ஆட்டிச்கலவுடனும் வெளிநாட்டமைச்சர் ஜனுப் ஏ. சி. எஸ்ஹமீட்டுடனும் தொடர்பு கொண்டு பேசினுர்.

## பொலிகநுந்நாளே

திருப்பொலி நலமது திகழ்சொற் பொழிவை
விருப்பொடு கேட்டோர் வியந்து அளித்திடு
செஞ்சொற் செம்மணி சித்தாந்தச் செல்வி
சிவயச் செல்வி சிவஞான வித்தகர்
செஞ்சொற் கொண்டல் திருமொழி அரசி
திருமுறைச் செல்வி சித்தாந்த ஞானகரம்
திருவாசகக்கொண்டல் திகழ்சைவ தரிசினி
தூய சிறப்புடைத் துர்க்கா துரந்தரி
எனநல விருதுகள் ஏற்றுயர் செல்வி
அருள்மிகு துர்க்கா அம்பிகை அரும்பொருள்
அறம்பல பெருக்கி அரியதாம் செயல்புரி
அறத்தின் செல்வியாய் அவனியோர் போற்ற
திறம்மிகு தெய்வத் திருவுடை மாதாம்
தங்கம் மாவெனும் தகவுடைச் சீரோய்
விண்ணின் வீழ்மழைத் துளியினும்
புகழொடு விளங்கப் பொலிகநின் நாளே.

— வ. குகசர்மா

## மரண அறிவித்தல்

### கதிர்காமர் தாமோதரம்பிள்ளை

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் 71/9 A, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியர் தாமோதரம்பிள்ளை அகலமரணமானுர். இவர் ஓய்வு பெற்ற ஆசிரியை கிருஷ்ணம்மாவின் அன்புக் கணவரும், இராதாகிருஷ்ணன் (ரோறு லிமிட்டெட்), இராதாலெட்மி, பாலகிருஷ்ணன் (லண்டன்), இராமகிருஷ்ணன், ஞானகிருஷ்ணன் என்போரின் அன்புத் தந்தையம், வாசுகி (சட்டத்தரணி), சச்சிதானந்தன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் மாமனருமாவார். இவர் காலஞ்சென்ற முத்துவேலு, கொழும்பு பிரபல வர்த்தகர்கள் பொன்னம்பலம், ஆறுமுசம், மார்க்கண்டு ஆகியோரின் சகோதரரும், செல்லமுத்து-சுந்தரம்பிள்ளையின் மைத்துனரும், கதிர்காமர் வள்ளியம்மையின் அன்புப் புதல்வரும் சின்னையா நாகாத்தைப் பிள்ளையின் மருமகனுமாவார். ஈமக்கிரியைகள் 8-1-85 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். (1258)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eeianadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.